[1996 பிப்ரவரி 28

வெளிமான் என்ற ஒருவகை சிறப்பு மான்கள் அதிகமாக நிறைந்திருக்கின்ற தாளவாடி பகுதியில் அங்கே சரணாலயம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினா எண் 149, திரு.மு.நடேசன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**149—**

நெத்திமேடு மின்சார நிலையம்

***35321**—திரு. மு. நடேசன் :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நெத்திமேடு மின்சார நிலையத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் நில இணைப்பு (Earth connection) இல்லாமல் மின்சாரம் வழங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதனைச் சரி செய்ய அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு.எஸ்.கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*திரு. மு. நடேசன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நெத்திமேடு பகுதியிலே உள்ள பிரச்சினையைப் பற்றி நான் சென்ற ஆண்டு பொதுப்பணித்துறை அமைச்சரிடம் சொன்னபோது, அவர்கள் அங்கே தொடர்பு கொண்டு அந்தப் பிரச்சினையை எர்த் கனெக்ஷன் இல்லாத பகுதிகளுக்கு எர்த் கனெக்ஷன் கொடுக்கவேண்டும் என்று ஆணையிட்டார்கள். இரண்டு தினங்களில் அங்கே எர்த் கனெக்ஷன் கொடுத்து, அங்கே ஷாக் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இதுபோன்று மற்ற இடங்களில் எர்த் கனெக்ஷன் இல்லாமல் எங்காவது மின்நிலையங்கள் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நெத்திமேடு 230 கிலோவாட் துணை மின் நிலையம், ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வருகிறது. அந்த

*1996 பிப்ரவரி 28]*

துணை மின்நிலையத்தைப் பொறுத்தவரையில் எர்த் கனெக்ஷன் பற்றி சிற்சில பிரச்சினை இருக்கிறது. அது எங்கள் கவனத்திற்கு வந்தவுடன் சரிசெய்யப்பட்டது. பொதுவாக எர்த்மேட் இல்லாமல் எந்த துணை மின் நிலையமும் செயல்படுவது கிடையாது. ஏனென்றால், வானத்திலே மின்னல் வந்து இடி வந்தால் அந்த எர்த்மேட் வழியாகத்தான் அப்சார்ப் செய்ய முடியும். அது தவிர, இங்கே மின்சாரம் வழங்குவதில் பிரச்சினை ஏற்படுகிற நேரத்தில், இந்த எர்த்மேட்தான் பயன்படுகிறது. நாம் அதைப் பராமரிக்கிற போது பிரச்சினை ஏதும் வந்தால், லீக்கேஜ் ஆனாலும், நம்முடைய கவனத்திற்கு வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்போது நெத்திமேடு பகுதிகளில் நடவடிக்கை எடுத்து மார்ச் '95-ல் பணிகள் எல்லாம் முடிக்கப்பட்டுவிட்டன. திட்ட மதிப்பீடு தயாரிக்கும்போதும், பாதுகாப்பு கருதியும் எர்த்மேட் இல்லாமல், எந்த துணை மின் நிலையமும் இயங்குவதில்லை. எல்லா துணை மின் நிலையங்களும் எர்த்மேட் உள்ளது. எதாவது சிறு சிறு பிரச்சினைகள் இருந்தால், அது அரசின் கவனத்திற்கு வரும்போது, அதை உடனடியாக சரி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 150, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை. வினா எண் 151 திரு. சி.சுவாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**151—**

### மானியத்துடன் உரம் வழங்குதல்

*** 35464—**திரு.சி.சுவாமிநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மை விளைபொருள் இணையகம் 'தாய்' நிறுவனத்தின் மூலம் நடப்பாண்டில் மானியத்துடன் உரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பாண்டில் வேளாண்மை விளைபொருள் இணையம் 'தாய்' நிறுவனத்தின் மூலம் மான்யத்துடன் உரம் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.